[24th February 1961

Sri S. M. Annamalai : சென்னையில் உள்ள சில அலுவலகங்களை மாவட்டத் தலைநகரங்களில் மாற்றினால் செலவு குறையாதா? அதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப் போகிறீர்கள்?

The Hon. Sri P. Kakkan : எல்லாவற்றையும் தூரத்திற்கு அனுப்பிவிட்டாலும் கஷ்டமாக இருக்கும். ஆகவே எதை எதை எந்த எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அங்கே வைக்கப் படுகிறது.

Groundnut cake

* 441 *Q.*—Sri T. T. Daniel : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total quantity of groundnut cake exported from the Madras State during the last two years;

(*b*) the price of groundnut cake per candy; and

(*c*) whether the groundnut cake produced in this State is enough to meet the requirements of this State?

The Hon. Sri M. Bhaktavatsalam : (*a*), (*b*) & (*c*) A statement [a] is placed on the table of the House.

Sri T. T. Daniel : Whereas the groundnut oil cake produced in Madras is not enough to meet the requirements of the State, may I have from the Hon. Minister a statement regarding the policy of export of groundnut from this State?

The Hon. Sri M. Bhaktavatsalam : Sir, if the hon. Member puts a separate question, I can present a statement as asked for by him. It is no doubt correct to say that we have not sufficient groundnut oil cake to meet the requirements of the State for use both as cattlefeed and manure. We should also have some interest in the groundnut export trade. Whatever foreign exchange is secured by export is fully utilised for getting more chemical fertilisers from foreign countries.

Sri M. Kalyanasundaram : அந்நிய நாட்டுச் செலாவணி சம்பாதிக்க வேண்டுமென்பது அவசியம்தான். இருப்பினும் நம்முடைய விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டியது அதைவிட முக்கியமானது. கடலைப் பிண்ணாக்கின் விலையும் மூட்டை 20, 30 ரூபாய் என்று அதிகமாகிறது. ஆகவே விலையைக் குறைக்க ஏற்றுமதியைத் தடை செய்வார்களா? அல்லது விலையைக் குறைக்க வேறு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

The Hon. Sri M. Bhaktavatsalam : இந்தப் பிரச்சனை அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டே நடவடிக்கை எடுக்கப் படுகிறது. கடலைப் பிண்ணாக்கு எப்படி விவசாயத்திற்கு அவசியமோ, அப்படியே அந்நியநாட்டுச் செலாவணியும் ரசாயன உரம் விவசாயத்திற்காக வாங்குவதற்கு அவசியமாக இருக்கிறது.

---

[a] Printed as Appendix I on page 489 infra.

24th February 1961]

SRI T. T. DANIEL : Sir, may I know whether there is any proposal to bring down the price of the groundnut oil cake and if so whether there is any proposal to have a control for this article?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say whether there is any specific proposal to control the price of oil **cake.**

SRI V. K. KOTHANDARAMAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தீவிர சாகுபடியின் மூலமாக உணவு உற்பத்தி செய்ய வேண்டும், கால்நடைச் செல்வத்தை வளர்க்க வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டிருப்பதனால் இவை எல்லாவற்றுக்கும் அவசியமாக இருக்கிற கடலைப் பிண்ணாக்கை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது முழுக்க முழுக்க நிறுத்தப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தீவிர விவசாய சாகுபடி திட்டத்திற்கு ரசாயன உரமும் மிகவும் அவசியமானதே. அந்நிய நாட்டுச் செலாவணியைப்பற்றி கவனம் செலுத்தாது இதை அடியோடு நிறுத்திவிடலாம். ஆனால் எந்த அளவுக்கு நம் ராஜ்யத்தில் இருந்து ஏற்றுமதி அனுமதிக்க முடியுமோ அதைப் பரிசீலனை செய்துதான் இதற்குச் சம்மதம் தெரிவிக்கிறோம்.

SRI A. VEDARATHNAM : ஒரு டன் பிண்ணாக்கு ஏற்றுமதி செய்வதிலிருந்து நமக்குக் கிடைக்கிற அந்நியச் செலாவணி எவ்வளவு ? அதனால் நமக்குக் கிடைக்கிற எரு அளவு எவ்வளவு ? அதைவிட அதிகமா, குறைவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஒரு சமயத்தில் மொத்தம் கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்கு மேல் அந்நிய நாட்டுச் செலாவணி கிடைத்தது. அதன்மூலம் ரசாயன உரம் பெறுவது சாத்தியமாயிற்று.

SRI T. T. DANIEL : Since this article is also a dollar earning commodity, may I know, Sir, whether the Government has got any scheme to further increase production of groundnut cake?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say there is any specific proposal to increase the production of the oil cakes.

SRI V. SUBBIAH : இந்த வேர்கடலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு உண்மையிலேயே விதைக்கு, பண்டத்திற்குக்கூட கிடைப்பதில்லை. விலை உயர்வு அப்படி இருக்கிறது. அதை இந்த உபயோகத்திற்காவது கட்டுப்படுத்த முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலையைக் கட்டுப் படுத்த உருப்படியான திட்டம் இல்லையென்று சொன்னேன். மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். எப்படியும் இதை விற்கிற வர்களும் விவசாயிகள்தான். ஆகவே அதிக விலை விற்கிறது என்றாலும் இந்தப் பணம் யாரிடமும் போகவில்லை. விவசாயி களுக்கே போகிறது.

[24th February 1961

SRI A. A. RASHEED : Sir, in 1958–59 a quantity of 18,955 tons has been exported and in 1959–60 a quantity of 23,178 tons has been exported. When there is shortage of manure of groundnut oil cakes, what is the reason for increasing the export?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that increase in export does not mean that there is shortage of manure.

Wool factory

* 443 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, விண்ணமங்கலம் கிராமத்தில் ஆரம்பிக்கப் போவதாக இருக்கும் கம்பளி தொழிற்சாலைக்கான எல்லா இயந்திரங்களும் வந்து விட்டனவா ?

(இ) எப்பொழுது ஆரம்பிக்க உத்தேசம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) All the machines, except the Loose Wool Drying Machine required for the Wool Processing Centre, Vinnamangalam, have been received and erected. Pending the receipt of the drying machine, it is proposed to adopt the open air drying method.

(*b*) The Centre has started functioning from the 17th of December 1960.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் கம்பளம் தயார் செய்வதற்குப் பிரதானமாக இருக்கக்கூடிய மூலப்பொருள் ரோமம். வடாற்காடு ஜில்லாவில் அப்படி உற்பத்தியாகக் கூடியது பஞ்சாப், பெங்கால் போன்ற இதர ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்வதன் காரணமாக இங்கே அத்தொழில் வளராத காரணத்தினால் அந்த மூலப்பொருள்களை இங்கேயே உபயோகப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதனால்தான் மைசூர் ராஜ்யமும், சென்னை ராஜ்யமும் சேர்ந்து விண்ணமங்கலத்தில் இதற்கென ஒரு ஸ்தாபனத்தை அமைத்திருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, what is the capacity of this wool processing centre and what is the share of our State in it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the cost is shared by the Mysore and Madras States half and half; about the capacity, I do not have the particulars with me now.